DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 7 |
| Name | : அய்யனாரர் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முருகன் என்பவரை எனக்கு தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். நான் சங்கரன்கோவிலில் டீக்கடையில் வேலை பார்த்துவிட்டு தினமும் ஊருக்கு செல்வேன். அப்போது சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டதன்பேரில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில் 07.06.2016 ம் தேதி இரவு 7 மணிக்கு சண்முகநல்லூர் ரெட்டியபட்டி மெயின்ரோட்டில் ஆறுமுகமூப்பனார் வீட்டின் முன்பு நானும், முருகனும் பேசிக் கொண்டிருந்தோமா என்றால் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது சின்னகோவிலான்குளம் போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும், முருகன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் கையொப்பம் இட்டேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பார்வை மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பார்வை மகஜரில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**